நகராட்சி நிர்வாகம்,
திருச்செந்தூர் –628215
நாள்: 21.03.2022

சாதாரணக்கூட்டம்

அன்புடையீர் வணக்கம்,

திருச்செந்தூர் நகராட்சியின் சாதாரணக்கூட்டம் 28.03.2022 தேதி திங்கள் கிழமை, **காலை** 10,00 மணிக்கு நகர் மன்ற கூட்ட அரங்கில் வைத்து தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது. அதுசமயம் கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

தலைவர்
திருச்செந்தூர் நகராட்சி

பொருள் எண். 01

திருச்செந்தூர் நகராட்சி அரசாணை (நிலை) எண். 83, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (தேர்தல்) நாள். 14.10.2021. மற்றும் அரசாணை எண். 116 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 07.12.2021–ல் நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது..

அதனைத் தொடர்ந்து பேரூராட்சியில் பொது நிதி என கணக்கு பராமரிக்கப்பட்டு வந்த கணக்கு, தற்போது நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண். 25896/2021/ஐடி நாள்: 10.03.2022ன் படி வருவாய், மூலதன நிதி (Revenue Fund) மற்றும் குடிநீர், வாறுகால் நிதி என இரண்டு நிதிகளாக பிரித்து தனி தனி வங்கி கணக்கு பராமரிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது,

அதன் அடிப்படையில் கீழ்கண்டவாறு இரண்டு நிதிகளாக வருவாய் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதிக்கு.

வருவாய், மூலதன நிதி	**குடிநீர், வாறுகால் நிதி**
சொத்து வரி மற்றும் காலியிட வரியில் 8 சதவீதம்	சொத்து வரி மற்றும் காலியிட வரியில் 2 சதவீதம்
மத்திய, மாநில நிதி பகிர்வு	குடிநீர் கட்டணம்
தொழில்வரி	பாதாள சாக்கடை கட்டணம்
தொழில் உரிமம் கட்டணம்	பணிகள் மற்றும் பணியாளர் ஊதியம்
வரியில்லா இனங்கள்	குடிநீர் இணைப்பு மற்றும் வாறுகால் இதர வருவாய்
கட்டிட வரைபட கட்டணம்	
இதர வருவாய்	
பணிகள் மற்றும் பணியாளர் ஊதியம்	
ஒதுக்கப்பட்ட வருவாய்	

மேலும் ஏற்கனவே பராமரிக்கப்பட்டு வந்த நூலக வரி அதன் படியே இனிமேலும் தனி வங்கிக் கணக்கில் பராமரிக்கப்பட்டு வரும் என்ற விபரம் மன்றத்தின் தகவலுக்கு.

தீர்மானம் எண். 1.:– தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 02

திருச்செந்தூர் பேரூராட்சி அரசாணை (நிலை) எண். 83, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (தேர்தல்) நாள். 14.10.2021 மற்றும் அரசாணை எண். 116 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 07.12.2021–ல் நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது.

குடிநீர்கட்டணம் மற்றும் வாறுகால் கட்டணம் ஆகியவற்றில் மாதம் தோறும் வசூல் செய்யப்பட்ட ரூ. 5.00/– அபராதத் தொகையானது இனிமேல் வரும் காலங்களில் முன்று மாதங்களுக்கு ஒருமுறை 15 ஆக வசூல் செய்யப்படும்.

வரியில்லா இனங்களில் ஆண்டு இறுதியில் வசூல் செய்யப்பட்ட அபராதத்தொகை ரூ.500/– வருங்காலங்களில் மாதம் ரூ. 50 வீதம் வசூல் செய்திட மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மானம் எண். 2.:– தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 03

திருச்செந்தூர் நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தூய்மை பணிகள் மேற்கொள்ள ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் சுய உதவி குழுக்கள் மூலம் தற்காலிக தூய்மை பணியாளர்களால் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது மேற்படி சுயஉதவி குழுக்களின் ஒப்பந்த காலம் முடிவடைவதால் புதியதாக ஒப்பந்த புள்ளி கோர சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர், அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21787/2021/EA2, நாள்.02.10.2021 ல் நகராட்சி நிர்வாக இயக்குநரின் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கருத்துருக்கள் தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி அனுமதி பெறும் வரை திருச்செந்தூர் பகுதிகளில் தற்காலிக தூய்மை பணியாளர்கள் மூலம் தூய்மை பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மானம் எண். 3.:– தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 04

திருச்செந்தூர் பேரூராட்சி அரசாணை (நிலை) எண். 83, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (தேர்தல்) நாள். 14.10.2021 மற்றும் அரசாணை எண். 116 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 07.12.2021–ல் நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து நகராட்சியினை மேம்படுத்திட கீழ்கண்ட பணிகள் மேற்கொள்வது அவசியமாக உள்ளதால் மேற்படி பணியினை வரும் நிதியாண்டில் அரசு திட்ட நிதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

1. பாதாளசாக்கடை திட்டப் பணிகள் முடிவுற்று பொதுமக்களுக்கு இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது மேற்படி இணைப்பினை தவணை

முறையில் பொதுமக்களுக்கு வழங்கிட விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

2. பாதாளசாக்கடை சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர் தற்போது ஆவுடையார் குளம் வடிகாலில் விடப்பட்டு வருகிறது. இதனைத் தடுக்கும் விதமாக பாதாள சாக்கடை சுத்திகரிப்பு நிலையத்தின் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரினை, தோப்புரிலிருந்து ஆலந்தலை வரை குழாய் அமைத்து திருச்செந்தூர் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட 82 ஏக்கர் இடத்திற்கு கொண்டு செல்ல வேண்டும்.
3. நகராட்சியின் முக்கிய பகுதிகளில் பல இடங்களில் மின் விளக்குகள் இல்லாமல் இருள் சூழ்ந்த நிலையில் உள்ளது. மேற்படி பகுதிகளில் புதியதாக உயர்மின் கோபுர விளக்குகள் அமைக்கப்பட வேண்டும்.
4. திருச்செந்தூர் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட தினசரி சந்தையில் ஏற்கனவே 148 கடைகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது இதனுடன் சேர்த்து கூடுதலாக 152 கடைக்கு அனுமதி பெற்று மொத்தம் 300 கடைகள் அமைக்கப்பட வேண்டும்.
5. புதியதாக பேருந்துநிலையம் அமைக்கப்பட வேண்டும்.
6. புதியதாக ஆம்னி பேருந்துநிலையம் அமைக்கப்பட வேண்டும்.
7. புதியதாக நகராட்சி அலுவலக கட்டிடம் கட்டப்பட வேண்டும்.
8. நகராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து பூங்காக்களும் சுத்தம் செய்து மின் விளக்கு வசதி செய்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும்.
9. குமாரபுரம், ஆசிரியர் காலனி, ஆலந்தலை, தினசரி சந்தை மற்றும் அமலிநகர் பகுதிகளில் புதியதாக தரை மட்ட நீர்த்தேக்க தொட்டி அமைக்கப்பட வேண்டும்.
10. ஆவுடையார் குளம் மறுகால் ஓடை எடிசன் மருத்துவமனை முதல் ஜீவா நகர் வரை கான்கிரீட் தளம் அமைத்து மூடி அமைக்க வேண்டும்.
11. திருச்செந்தூர் நகராட்சி மாட்டுத்தாவணி பகுதியில் உள்ள அனைத்து முட்செடிகளும் ஜேசிபி மூலம் அகற்றப்பட வேண்டும்.
12. கீழரதவீதி முகப்பு முதல் எடிசன் மருத்துவமனை வரை உள்ள பாதாள சாக்கடை குழாய் பழுதாகி உள்ளதால் மேற்படி குழாயினை அகற்றி புதியதாக குழாய் அமைக்கப்பட வேண்டும்.
13. திருச்செந்தூர் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட தினசரி சந்தை கடைகளுக்கு தரை வாடகை அடிப்படையில் நாள் ஒன்றுக்கு ரூ. 20 வீதம் 225 கடைகளுக்கு வசூல் செய்யப்பட்டு வருகிறது. இது குறைந்தபட்ச வாடகை என்பதால் சதுர அடிக்கு ரூ. 1 வீதம் தரை வாடகை வசூல் செய்யப் பட வேண்டும். குறிப்பு : வாகன பழுது நீக்கும் கடைகள் மற்றும் பழைய இரும்பு கடைகளுக்கு அனுமதி இல்லை
14. சாலை ஓரங்களில் நடமாடும் கடைகள் வைத்துள்ள நபர்களுக்கு அரசு விதிகளுக்குட்பட்டு நாள் ஒன்றுக்கு ரூ.100 வீதம் வசூல் செய்யப்பட வேண்டும்.

15. திருச்செந்தூர் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட பகுதிகளில் நிறுத்தப்படுகிறன்ற கீழ்கண்டவாறு வாகனங்களுக்கு கீழ்கண்டவாறு வாடகை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

வ.எண்	வாகன விபரம்	வாடகை
1	ஆம்னி பேருந்து	ரூ. 200 (**நாள் ஒன்றுக்கு**)
2	லோடு வாகனம்	ரூ. 1000 (மாதம் **ஒன்றுக்கு**)
3	வேன்	ரூ. 750 (மாதம் **ஒன்றுக்கு**)
4	கார்	ரூ. 500 (மாதம் **ஒன்றுக்கு**)
5	ஆட்டோ	ரூ. 300 (மாதம் **ஒன்றுக்கு**)

16. திருச்செந்தூர் நகராட்சி பகுதியில் அனுமதியின்றி கட்டப்படும் கட்டிடங்களை தடுத்து நிறுத்தி அரசு விதிகளுக்குட்பட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
17. திருச்செந்தூர் நகராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து ஆக்கிரமிப்புகளும் அகற்றப்பட வேண்டும்.

தீர்மானம் எண். 4.:– தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 05

திருச்செந்தூர் நகராட்சி மன்றத் தலைவர் மற்றும் 24 வது வார்டு உறுப்பினர் திருமதி. ர. சிவஆனந்தி அவர்கள் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள வேண்டி, அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

1. கந்தசாமிபுரம் பகுதியில் சாலை இல்லாத பகுதிகளில் புதியதாக சாலை அமைத்துத் தரக் கேட்டல்.
2. கந்தசாமிபுரம் பகுதிக்கு மின் விளக்கு இல்லாத பகுதிகளில் புதியதாக மின் விளக்கு அமைத்துத் தரக் கேட்டல்.
3. கந்தசாமி புரத்திற்கு குரங்கனி ஆற்றுக் குடிநீர் வழங்க புதியதாக குழாய் அமைத்துத் தரக் கேட்டல்.
4. கந்தசாமி புரத்தில் பழுதாகியுள்ள கிணற்றினை சுத்தம் செய்து தர கேட்டல்.
5. கந்தசாமி புரத்தில் உள்ள அருள்மிகு சுடலைமாட சுவாமி திருக்கோவிலுக்கு புதியதாக குழாய் அமைத்து குடிநீர் வசதி செய்துத் தரக் கேட்டல்.
6. கந்தசாமிபுரத்தில் பழுதடைந்த அங்கன்வாடி கட்டிடத்தை புதுப்பித்துத் தர கேட்டல்.
7. சுனாமி நகர் பகுதியில் புதியதாக மின்விளக்குகள் அமைத்துத் தரக் கேட்டல்.
8. சுனாமி நகர் பகுதியில் சாலை இல்லாத பகுதிகளில் புதியதாக சாலை அமைத்துத் தரக் கேட்டல்.
9. சுனாமி நகர் பகுதியில் உள்ள பொதுக் கழிப்பிடத்தினை பராமரிப்பு பணி செய்துத் தரக் கேட்டல்.
10. சுனாமி நகர் பகுதியில் உள்ள பூங்காவில் பராமரிப்பு பணிகள் செய்துத் தரக் கேட்டல்.

11. சுனாமி நகர் பகுதியில் உள்ள அங்கன்வாடி கட்டிடத்தில் பராமரிப்பு பணி செய்து மின்சார வசதி செய்துத் தரக் கேட்டல்.
12. சுனாமி நகர் பகுதியில் புதியதாக சமுதாயநலக்கூடம் அமைத்துத் தரக் கேட்டல்.

கந்தசாமிபுரம், கணேசபுரம் மற்றும் சுனாமி நகர் பகுதியில் புதியதாக ரேசன் கடை அமைக்க கேட்டல்.

தீர்மானம் எண். 5.:– தீர்மானிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 06</u>

திருச்செந்தூர் நகராட்சி துணைத் தலைவர் மற்றும் 1வது வார்டு உறுப்பினர் திரு. செங்குழி A.B. ரமேஷ் அவர்கள் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள வேண்டி, அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

1. குமாரபுரம், நந்தகுமாரபுரம், ஆசிரியர் காலனி, காந்திபுரம் மற்றும் மாவீரன் நகர் ஆகிய பகுதிகளில் புதியதாக 75 எண்ணம் தெருமின் விளக்கு அமைக்கக் கேட்டல்.
2. காந்திபுரம் வாய்க்கால் ஓரங்களில் தடுப்பு சுவர் மற்றும் படித்துறை அமைக்க கேட்டல்.
3. குமாரபுரம் பகுதி முழுவதும் மழைநீர் வடிகாலுடன் கூடிய சாலை அமைக்கக் கேட்டல்.
4. 2 இடங்களில் 5 லட்சம் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி 2 எண்ணம் அமைக்கக் கேட்டல்.
5. குமாரபுரம் ஆசிரியர் காலனி பகுதியில் 2 லட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்கக் கேட்டல்.

தீர்மானம் எண். 6.:– தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 07

திருச்செந்தூர் நகராட்சி 2வது வார்டு உறுப்பினர் திரு. S.A. செந்தில்குமார் அவர்கள் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள வேண்டி, அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

1. அன்புநகர், பிடிஆர் நகர், கோகுல்நகர், ஜெயந்தி நகர் மற்றும் பாளை ரோடு ஆகிய பகுதிகளில் புதியதாக 40 எண்ணம் தெருமின் விளக்கு அமைக்கக் கேட்டல்.
2. 2வது வார்டுக்குட்பட்ட அனைத்து தெருக்களிலும் மழைநீர் வடிகாலுடன் கூடிய சாலை அமைக்கக் கேட்டல்.
3. மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இருக்கும் பகுதியில் 5 லட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்கக் கேட்டல்.
4. மெயின் ரோட்டில் உள்ள மதுபானக்கடையினை அகற்றி தெருவிற்குள் 200மீ அமைக்கப்பட்ட வேண்டும் (போக்குவரத்திற்கு இடையூராக இல்லாமல்)

தீர்மானம் எண். 7.:– தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 08

திருச்செந்தூர் நகராட்சி 3வது வார்டு உறுப்பினர் திரு. ஜே.வி. அந்தோணி ட்ரூமன் அவர்கள் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள வேண்டி, அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

1. 3வது வார்டுக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள அனைத்து வாறுகால்களுக்கும் மூடி அமைத்தல்.
2. வெயிலுகந்தம்மன் கோவில் தெரு மற்றும் காமராஜபுரம் தெருவில் உள்ள கழிவுறைகள் பழுது நீக்கம் செய்தல்.
3. காமராஜபுரத்தில் பக்தர்கள் அமர்வதற்கு 15 சிமெண்ட் பெஞ்ச் அமைத்தல்.
4. புதியதாக 10 எண்ணம் மின் விளக்குகள் அமைத்தல்.
5. காமராஜபுரத்தில் புதியதாக மினி பவர் பம்ப் அமைத்தல்.

தீர்மானம் எண். 8.:– தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 09

திருச்செந்தூர் நகராட்சி 4 வது வார்டு உறுப்பினர் திரு. செ. தினேஷ் கிருஷ்ணா அவர்கள் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள வேண்டி, அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

1. மினிபவர் பம்ப் பழுது சரி செய்ய கேட்டல்.
2. சந்தனமாரியம்மன் கோவில் முகப்பு பெரியசாமி நாடார் பெட்டிக்கடை முதல் மினி சிவமுருகன் லாட்ஜ் வரை புதியதாக பேவர் பிளாக் சாலை அமைத்தல்.

தீர்மானம் எண். 9.:– தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 10

திருச்செந்தூர் நகராட்சி 5 வது வார்டு உறுப்பினர் திரு. மா. சுதாகர் அவர்கள் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள வேண்டி, அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

1. பழுதான அங்கன்வாடி கட்டிடத்தை இடித்து விட்டு புதியதாக கட்டுதல்.
2. 3 கிணறுகள் பழுதாகி உள்ளதை சரி செய்து தரக் கேட்டல்.
3. 10 ஆண்டுகளாக மின் மோட்டர் பழுதடைந்துள்ளதை, புதியதாக மாற்றித் தரக் கேட்டல்.
4. பாதாளசாக்கடை விடுபட்ட பகுதிகளில் புதியதாக பாதாளசாக்கடை அமைத்துத் தரக் கேட்டல்.
5. குறுகிய சாலைகளில் பேவர் பிளாக் அமைத்துத் தரக் கேட்டல்.
6. வாறுகால்கள் சீரமைத்து மூடி அமைத்துத் தரக் கேட்டல்.
7. கோவில் தெருவில் அனுமதியின்றி கட்டி உள்ள திருமுருகன் குடில் என்ற தங்கும் விடுதியில் மீது நடவடிக்கை எடுக்க கேட்டல்.

தீர்மானம் எண். 10.:– தீர்மானிக்கப்பட்டது

<u>பொருள் எண். 11</u>

திருச்செந்தூர் நகராட்சி 6 வது வார்டு உறுப்பினர் திருமதி. சூரியகலா அவர்கள் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள வேண்டி, அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

1. சலவையாளர் மாரியம்மன் கோவில் தெருவில் உள்ள பொது கழிப்பிடத்தை புதுப்பித்து தர கேட்டல்.
2. கழிவுநீர் கால்வாயினை அகலப்படுத்தி மூடி போட்டு தர கேட்டல்.
3. 6வது வார்டில் உள்ள அனைத்து சாலைகளின் நடைப்பாதை பகுதிகளிலும் பேவர்பிளாக் அமைக்க கேட்டல்.
4. வடக்கு மாரியம்மன் கோவில் தெருவில் 3 எண்ணம் பொது குடி தண்ணீர் குழாய், 3 எண்ணம் தெருமின் விளக்குகள் அமைக்க கேட்டல்.

தீர்மானம் எண். 11.:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண். 12

திருச்செந்தூர் நகராட்சி 7 வது வார்டு உறுப்பினர் திருமதி. கௌரி அவர்கள் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள வேண்டி, அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

1. வெயிலுகந்தம்மன் கோவில் தெரு முதல் கீழரதவீதி முகப்பு வரை சாலை அமைத்துத் தரக் கேட்டல்.
2. அன்பிற்பிரியாள் கோயில் முன், வெயிலுகந்தம்மன் கோவில் தெரு ரேசன் கடை முன், கீழ வெயிலுகந்தம்மன் கோவில் தெரு நடுப்பகுதி போன்ற இடங்களில் புதியதாக தெருமின் விளக்கு அமைக்கக் கேட்டல்.

தீர்மானம் எண். 12.:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண். 13

திருச்செந்தூர் நகராட்சி 8 வது வார்டு உறுப்பினர் திருமதி. கிருஷ்ணவேணி அவர்கள் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள வேண்டி, அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

1. 8வது வார்டில் அமைந்துள்ள வாசக சாலையினை சீரமைத்து தியாகிகள் புகைப்படம் அமைக்க கேட்டல்.

தீர்மானம் எண். 13.:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண். 14

திருச்செந்தூர் நகராட்சி 9 வது வார்டு உறுப்பினர் திரு. S. கண்ணன் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள வேண்டி, அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

1. நகராட்சி முழுவதும் இரண்டு நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் விநியோகம் செய்வது மற்றும் சுத்தமான குடிநீர் வழங்கப்படுகிறதா என்பதனை கண்காணிக்க தனியாக ஒரு குழு அமைக்க கேட்டல்.
2. வடிகால் தெருவில் புதியதாக சாலை அமைக்க கேட்டல்.
3. அனந்தராமர் சந்துக்கு வடக்கு பக்கம் உள்ள தெருவில் புதியதாக சாக்கடை வாறுகால் அமைத்து தர கேட்டல்.
4. மேலரதவீதியில் உள்ள சரஸ்வதி மருத்துவமனைக்கு செல்லும் தெருவில் புதியதாக சாலை அமைக்க கேட்டல்.

தீர்மானம் எண். 14:– தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 15

திருச்செந்தூர் நகராட்சி 10 வது வார்டு உறுப்பினர் திருமதி. செ. அர்ச்சனா அவர்கள் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள வேண்டி, அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

1. 8 இடங்களில் புதியதாக பொது குடிநீர் குழாய் அமைத்துத் தரக் கேட்டல்.
2. புதியதாக 45 இடங்களில் தெருவிளக்குகள் அமைத்துத் தரக் கேட்டல்.
3. பாரதியார் தெரு 1வது தெரு, பாரதியார் 1வது தெரு விரிவாக்க பகுதிகள் மற்றும் சங்கிவிளை பகுதிகளில் புதியதாக சாலை அமைத்துத் தரக் கேட்டல்.
4. பாரதியார் தெரு 1வது தெரு, பாரதியார் 1வது தெரு விரிவாக்க பகுதிகள் மற்றும் சங்கிவிளை பகுதிகளில் பாதாளசாக்கடை அமைத்துத் தரக் கேட்டல்.

தீர்மாணம் எண். 15:– தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 16

திருச்செந்தூர் நகராட்சி 11 வது வார்டு உறுப்பினர் திரு. ராமன் அவர்கள் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள வேண்டி, அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

1. 11வது வார்டில் உள்ள தெற்குரதவீதி மெயின் ரோட்டில் 7 இடங்களில் ரப்பரால் ஆன ஸ்பீடு பிரேக்கர் அமைக்க கேட்டல்.
2. 11 வார்டில் அனைத்து தெருக்களிலும் உள்ள பழுதடைந்த மின் விளக்குகளை மாற்றி புதிய மின் விளக்குகள் பொருத்த கேட்டல்.
3. மூன்று நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் விநியோகம் செய்ய கேட்டல்.
4. தெற்குரதவீதியின் பின்புறம் கழிவுநீர் செல்லும் வாறுகால் சுத்தம் செய்ய கேட்டல்.
5. தெற்குரதவீதியின் ஆறுமுகம் டாக்டர் கிளினிக் அருகில் இடதுபுறம் தெற்கு நோக்கி செல்லும் சாலையில் பேவர்பிளாக் அமைக்க கேட்டல்.

தீர்மாணம் எண். 16:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண். 17

திருச்செந்தூர் நகராட்சி 12 வது வார்டு உறுப்பினர் திருமதி. சாரதா அவர்கள் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள வேண்டி, அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

1. 12 வது வார்டு முழுவதும் உள்ள வடிகால் சுத்தம் செய்து, கான்கிரீட் மூடி அமைத்தல் மற்றும் வடிகால் இல்லாத இடத்தில் புதியதாக சாக்கடை வடிகால் அமைக்க கேட்டல்.
2. நவ்வலடி சந்தில் உள்ள நகராட்சி நிர்வாகத்திற்கு உட்பட்ட தண்ணீர் தொட்டி அருகே குப்பைகளை அகற்றி அந்த இடங்களில் மீண்டும் குப்பைகள் விழாத வண்ணம் ஏற்பாடு செய்தல்.
3. நவ்வலடி சந்து, 1ம் சந்தி, 2ம் சந்தி வீதிகளில் புதியதாக சாலை அமைத்துத் தர கேட்டல்.

4. 12 வது வார்டு பகுதிகளில் மின்விளக்கு அமைத்தல், பொது சாக்கடை முடுக்குகளுக்கு கேட் அமைக்க கேட்டல்.
5. கூடுதல் துய்மை பணியாளர்கள் பணியமர்த்த கேட்டல்.
6. இரண்டு நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் விநியோகம் செய்ய கேட்டல்.

தீர்மாணம் எண். 17:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண். 18

திருச்செந்தூர் நகராட்சி 13 வது வார்டு உறுப்பினர் திரு. S.S. முத்துகுமார் அவர்கள் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள வேண்டி, அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

1. பள்ளத்தெருவில் பழுதடைந்த சிமெண்ட் சாலையினை அகற்றி புதியதாக பேவர்பிளாக் சாலை அமைத்து தரக் கேட்டல்.
2. பள்ளத்தெருவில் வாறுகால்களுக்கு மூடிஅமைத்து தரக் கேட்டல்.
3. புளியடித் தெரு சந்து முதல் கீழ ரத வீதி வரை மற்றும் போத்தி காம்பௌண்ட் பகுதிக்கு அருகில் வாறுகால் ஆழப்படுத்தி மேலே மூடி அமைத்து தரக் கேட்டல்.
4. 5 இடங்களில் புதியதாக தெரு மின் விளக்குகள் அமைத்துத் தர கேட்டல்.
5. கீழரதவீதி பகுதியில் மினி பவர் பம்ப் அமைத்து தரக் கேட்டல்.
6. சன்னதி தெருவில் இருந்து சபாபதிபுரம் வரை உள்ள வீரராகவபுரம் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்து தரக் கேட்டல்.

தீர்மாணம் எண். 18:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண். 19

திருச்செந்தூர் நகராட்சி 14 வது வார்டு உறுப்பினர் திருமதி. கோ. ரேவதி அவர்கள் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள வேண்டி, அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

1. புளியடித் தெருவில் உள்ள இந்திரா காம்பவுண்ட் பகுதியில் பாதாள சாக்கடை பணிகள் மேற்கொள்ளாமல் உள்ளது. எனவே பாதாள சாக்கடை அமைத்துத் தரக் கேட்டல்.
2. நியாய விலை கடையின் முன்பு சீட் அமைத்துத் தரக் கேட்டல்.

தீர்மாணம் எண். 19:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண். 20

திருச்செந்தூர் நகராட்சி 15 வது வார்டு உறுப்பினர் திருமதி. ம. சோமசுந்தரி தீர்த்தாரப்பன் அவர்கள் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள வேண்டி, அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

1. பாதாளசாக்கடை திட்டத்தில் உள்ள குறைபாடுகளை சரி செய்து அதிலிருந்து கழிவு நீர் வெளியேறாமல் சரி செய்யக் கேட்டல்.

2. பழைய கோவில் காவல் நிலையம் எதிரேயுள்ள குடியிருப்புகள் மற்றும் சபாபதி விநாயகர் காலனிக்கு பாதாள சாக்கடைத்திட்டத்தில் இணைப்பு தரக் கேட்டல்.
3. பழைய கோவில் காவல் நிலையம் எதிரேயுள்ள குடியிருப்புக்கு பொதுக்குடிநீர் குழாய் அமைத்துத் தர கேட்டல்.
4. சபாபதிபுரம் பேருந்து நிறுத்ததை பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் பயன்படுத்தும் வகையில் புதுப்பித்துத் தர கேட்டல்.
5. 15வது வார்டு பகுதியில் பழுதடைந்துள்ள அனைத்து சாலைகளிலும் புதியதாக சாலை அமைக்கவும், பொதுகுழாய்கள் அமைக்கவும் மற்றும் பொதுக்கழிப்பிடங்கள் அமைத்துத் தர கேட்டல்.
6. நந்தவனம் பகுதியில் பாதாள சாக்கடை இணைப்பு கொடுத்து புதிய சாலை அமைத்து மழைநீர் தேங்காமல் வடிகால் வசதி செய்து தரக் கேட்டல்.
7. வஉசி தெருவில் வடிகால் தூர் வாரி புதுப்பித்து தரக் கேட்டல்.
8. சபாபதி விநாயகர் கோவில் அருகில் உள்ள பழைய நீர்த்தேக்கத் தொட்டியை பொதுமக்கள் பயன்பெறும் வகையில் வேறு இடத்திற்கு மாற்றி புதிய தொட்டியமைத்து தரக் கேட்டல்.
9. சபாபதிபுரம் தெருவில் புதியதாக தெரு மின் விளக்கு அமைத்துத் தர கேட்டல்.

தீர்மானம் எண். 20:– தீர்மானிக்கப்பட்டது

<u>பொருள் எண். 21</u>

திருச்செந்தூர் நகராட்சி 16 வது வார்டு உறுப்பினர் திரு. நெ. ஆனந்த்ராமச்சந்திரன் அவர்கள் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள வேண்டி, அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

1. வீரராகவபுரம் தெருவில் விடுபட்ட பகுதிகளில் பாதாளசாக்கடை அமைத்துத் தர கேட்டல்.
2. வீரராகவபுரம் தெருவில் தெருவிளக்கு இல்லாத கம்பங்களில் புதியதாக தெருவிளக்குகள் அமைத்துத் தர கேட்டல்.
3. வீரராகவபுரம் தெருவில் பழுதாகி உள்ள கிணற்றினை சுத்தம் செய்து இரும்பு மூடி அமைத்துத் தர கேட்டல்.

தீர்மானம் எண். 21:– தீர்மானிக்கப்பட்டது

<u>பொருள் எண். 22</u>

திருச்செந்தூர் நகராட்சி 17 வது வார்டு உறுப்பினர் திரு. வேலம்மாள் வள்ளிராஜ் அவர்கள் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள வேண்டி, அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

1. வீரகாளிஅம்மன் கோவில் கீழத் தெருவில் உள்ள பழுதான அடி பம்பினை சரி செய்து தரக் கேட்டல்.
2. ஸ்ரீ முனியசாமி கோவில் முன்பு வேகத்தடை அமைத்துத் தரக் கேட்டல்.

3. தெற்கு புதுத்தெரு ஆசாரி காம்பௌண்ட் பின்புறம் மற்றும் கீழப்புதுத் தெருவில் உள்ள பாதாளச் சாக்கடை அடைப்பினை சரி செய்து தரக் கேட்டல்.
4. 17வது வார்டு பகுதியில் பழுதடைந்த தெரு விளக்குகளை சரி செய்து தரக் கேட்டல்.
5. வீரகாளிஅம்மன் கோவில் கீழத் தெரு முதல் நடுத்தெரு வரை கழிவு நீர் வடிகால் கால்வாய் அமைத்து தரக் கேட்டல்.
6. வீரகாளிஅம்மன் கோவில் தெரு, வீரகாளிஅம்மன் கோவில் நடுத் தெரு, வீரகாளிஅம்மன் கோவில் கீழத் தெரு, தெற்கு புதுத்தெரு ஆசாரி காம்பௌண்ட் மற்றும் கிருஷ்ணா தியேட்டர் பின்புறம் ஆகிய பகுதிகளில் சாலை சீரமைப்பு பணி மற்றும் புதிய சாலை வசதி செய்து தரக் கேட்டல்.
7. வீரகாளியம்மன் கோவில் தெரு, வீரகாளியம்மன் கோவில் கீழத் தெரு, ஆசாரி காம்பௌண்ட், கீழப்புதுத் தெரு, தெற்குபுதுத் தெரு ஆகிய தெருக்களில் உள்ள நகராட்சி குடிநீர் குழாய்களை ஒன்றாக இணைத்து ஒரே நேரத்தில் தண்ணீர் திறந்து விட வழி செய்து தரக் கேட்டல்.
8. கீழ புதுத்தெரு மற்றும் தெற்கு புதுத் தெருவில் பழுதடைந்த நகராட்சி தண்ணீர் குழாய்களை சீரமைத்து தரக் கேட்டல்.
9. கீழப்புதுத் தெருவில் குடிநீருடன் கழிவு நீர் கலந்து வருவதை சரி செய்து தரக் கேட்டல்.
10. புதியதாக ஒரு லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைத்து தரக் கேட்டல்.
11. பாழடைந்த நூலக கட்டிடத்தை இடித்து விட்டு புதிய அங்கன்வாடி கட்டிடம் கட்டித் தரக் கேட்டல்.
12. ஆசாரி காம்பௌண்ட், கீழ புதுத் தெரு, தெற்கு புதுத் தெரு மற்றும் பால் பண்ணைத் தெருக்களில் உள்ள பாதாளச் சாக்கடைகளில் அடைப்பு ஏற்படாத வண்ணம் 200 MM விட்டம் கொண்ட பெரிய குழாய்கள் அமைத்து தரக் கேட்டல்.

தீர்மானம் எண். 22:– தீர்மானிக்கப்பட்டது

<u>பொருள் எண். 23</u>

திருச்செந்தூர் நகராட்சி 18 வது வார்டு உறுப்பினர் திரு. N. ஆறுமுகம் அவர்கள் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள வேண்டி, அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

1. முத்தாரம்மன் கோவில் தெரு முகப்பு, முத்தாரம்மன் கோவில் தெரு பின்புறம் மற்றும் ஸ்ரீராமகிருஷ்ணாந்தா பஜனை மடம் அருகில் வேகத் தடை அமைக்க கேட்டல்.
2. பழுதடைந்த பொதுகுடிநீர் குழாய் சரி செய்ய கேட்டல்.
3. நெல்லுக்கடைச்சந்து, முத்தாரம்மன் கோவில் தெரு பகுதிகளில் புதியதாக 16 எண்ணம் தெருவிளக்கு அமைத்து தர கேட்டல்.

4. கரம்பாவிளை மேல்நிலை நீர்தேக்க தொட்டியிலிருந்து முத்துமாலையம்மன் கோவில் தெரு முகப்பு வரை புதியதாக குடிநீர் மெயின் குழாய் அமைக்க கேட்டல்.
5. முத்தாரம்மன் கோவில் தெற்கு தெருவில் பேவர்பிளாக் சாலை அமைக்க கேட்டல்.
6. 18வது வார்டில் உள்ள அனைத்து வடிகாலிலும் சிமென்ட் கான்கிரீட் மூடி அமைக்க கேட்டல்.

தீர்மானம் எண். 23:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண். 24

திருச்செந்தூர் நகராட்சி 19 வது வார்டு உறுப்பினர் திரு. S. மகேந்திரன் அவர்கள் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள வேண்டி, அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

1. முத்துமாலையம்மன் கோவில் அருகில், முத்துமாலையம்மன் கோவில் 3வது தெரு, கிழக்கத்தியார் கோவில் முன்பு, அங்கன்வாடி பள்ளி முன்பு, சோர்வைகார சுவாமி கோயில் முன்பு, மேலதெரு மற்றும் வாய்க்கால் தெரு ஆகிய இடங்களில் புதியதாக சாலை அமைத்து தர கேட்டல்.
2. கிழக்கத்தியார் கோயில் கடைசி தெரு, CSI சர்ச் காம்பவுண்ட் முன்புறம் மற்றும் பின்புறம், முத்துமாலையம்மன் கோவில் 3வது தெரு, அங்கன்வாடி பள்ளி முன்பு, மேலதெரு வாய்க்கால் தெரு, மேலதெரு மெயின் ரோடு ஆகிய இடங்களில் மொத்தம் 13 தெரு மின் விளக்குகள் அமைத்து தர கேட்டல்.
3. CSI சர்ச் அருகில், கிழக்கத்தியார் கோயில் முன்பு, சோர்வைகார சுவாமி கோயில் முன்பு ஆகிய இடங்களில் மினி பவர் பம்ப் அமைத்து தர கேட்டல்.
4. பழுதான அங்கன்வாடி கட்டிடத்தினை புதுப்பித்து மின் இணைப்பு வழங்க கேட்டல்.

தீர்மானம் எண். 24:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண். 25

திருச்செந்தூர் நகராட்சி 20 வது வார்டு உறுப்பினர் திருமதி. முத்து ஜெயந்தி அவர்கள் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள வேண்டி, அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

1. 20வது வார்டு அமலி நகர் தெருக்களுக்கு புதியதாக பேவர் பிளாக் சாலை அமைத்துத் தரக் கேட்டல்.
2. கடற்கறை பகுதியில் உயர் கோபுர மின் விளக்குகள் 2 எண்ணம் அமைத்துத் தரக் கேட்டல்.
3. அமலிநகர் பகுதிக்கு பிரதான சாலை அமைத்துத் தரக் கேட்டல்.
4. பியோக காலனிக்கு புதியதாக தெரு மின் விளக்கு அமைத்துத் தரக் கேட்டல்.
5. அமலிநகர் பகுதியில் 300 வீடுகள் சொத்து வரி ரசீது இல்லாமல் உள்ளதை, புதியதாக சொத்து வரி நிர்ணயம் செய்து தீர்வை ரசீது வழங்க கேட்டல்.

தீர்மானம் எண். 25:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண். 26

திருச்செந்தூர் நகராட்சி 21 வது வார்டு உறுப்பினர் திரு. பா. முத்துகிருஷ்ணன் அவர்கள் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள வேண்டி, அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

1. கிருஷ்ணன் கோவில் தெருவில் புதியதாக சாலை அமைத்துத் தரக் கேட்டல்.
2. கிருஷ்ணன் கோவில் தெரு, முத்தாரம்மன் கோவில் 1வது தெரு, முத்தாரம்மன் கோவில் 2வது தெருக்களில் வடிகால் சரி செய்ய கேட்டல்.
3. புதியதாக தெரு மின் விளக்கு 20 எண்ணம் அமைத்துத் தரக் கேட்டல்.
4. நிரந்தர நியாய விலை கடை அமைத்துத் தரக் கேட்டல்.
5. பழுதான அங்கன்வாடி கட்டிடத்தை புதியதாக கட்டுதல்.
6. தெற்குபுது தெரு பால்பண்னை எதிரில் 5000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மினிபவர் பம்ப் அமைத்துத் தரக் கேட்டல்.
7. பழுதாகி உள்ள அடிபம்பு 4 எண்ணம் சரி செய்துத் தரக் கேட்டல்.
8. இயங்கி வந்த பொது குடிநீர் குழாய்களை மீண்டும் இரும்பில் அமைத்துத் தரக் கேட்டல்.
9. கிருஷ்ணன் கோவில் நான்கு முக்கு சந்திப்பில் உயர் கோபுர மின்விளக்கு அமைத்துத் தரக் கேட்டல்.

தீர்மானம் எண். 26:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண். 27

திருச்செந்தூர் நகராட்சி 22 வது வார்டு உறுப்பினர் திருமதி. லிங்கசெல்வி ஈந்தடிமுத்து அவர்கள் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள வேண்டி, அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

1. ஜே ஜே நகர் 2வது தெருவில் உள்ள குடிநீர் குழாய் சரி செய்துத் தரக் கேட்டல்.
2. பெஞ்சமின் காலனி முதல் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்துத் தரக் கேட்டல்.
3. ஜே ஜே நகர் பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைத்துத் தரக் கேட்டல்.
4. பெஞ்சமின் காலனியில் பழுதடைந்துள்ள அங்கன்வாடி நிலையத்தினை இடித்துவிட்டு புதியதாக அங்கன்வாடி கட்டிடம் கட்டித் தரக் கேட்டல்.
5. பெஞ்சமின் காலனி சமுதாய நலக்கூடத்தை பழுது நீக்கம் செய்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரக் கேட்டல்.
6. பெஞ்சமின் காலனி இரண்டாவது தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்துத் தரக் கேட்டல்.
7. கரம்பாவிளை தெற்கு தெரு, வடக்குத் தெரு, கிழக்கு தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்துத் தரக் கேட்டல்.

தீர்மானம் எண். 27:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண். 28

திருச்செந்தூர் நகராட்சி 23 வது வார்டு உறுப்பினர் திருமதி. S. சாந்தி அவர்கள் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள வேண்டி, அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

1. தோப்பூர் அருள்மிகு சுடலைமாடசுவாமி திருக்கோவில் பகுதியில் பொது குடிநீர் இணைப்பு, அதற்கு எதிர்புறமாக உள்ள வடபகுதியில் முதல் தெரு, இரண்டாம் தெரு பகுதிகளில் குடிநீர் இணைப்பு பகிர்மானக் குழாய் அருள்மிகு சுடலைமாடசாமி கோவில் கிழக்குப் பகுதியிலுள்ள தெரு மற்றும் டாக்டர் அம்பேத்கார் தெருவிற்கு குடிநீர் பகிர்மானக் குழாய் வழங்கிட வேண்டுகிறேன்.
2. தோப்பூர் பகுதிகளில் வடக்கு தெரு, டாக்டர் அம்பேத்கார் தெரு, மேலத் தெரு, கிழக்குத் தெருக்களில் மழைக்காலங்களில் பள்ளங்களில் மழைநீர் தேங்கி நிற்கிறது. மேலும் எல்லா தெருக்களிலும் சாலை குண்டும் குழியுமாக பெரியவர்கள், குழந்தைகள் நடமாட சிரமமாக உள்ளது. எனவே உயர் மட்ட புதிய சாலையை அமைத்திட வேண்டுகிறேன்.
3. தோப்பூர் மயான சாலை வழியாகத்தான் பெஞ்சமின் காலனி, கரம்பவிளை, வண்ணாந்திரவிளை அனைத்து சமூக மக்களும் பயன்படுத்தி வருகிறார்கள், மேற்படி சாலையில் மின்கம்பம், மின்விளக்கு காத்திருப்போர் அறை அமைத்து தரக்கேட்டல்
4. தோப்பூர் பகுதியிலுள்ள சாலையில் பல்வேறு பகுதிமக்கள் இளைஞர்கள் பெரியவர்கள் சிறுவர்கள் காலை மாலை நடைப்பயிற்சி மேற்கொண்டு வருகிறார்கள். மேற்படி பகுதியில் சிறப்பு பூங்கா அமைத்து தரக்கேட்டல்

தீர்மாணம் எண். 28:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண். 29

திருச்செந்தூர் நகராட்சி 27 வது வார்டு உறுப்பினர் திருமதி. S. லீலா அவர்கள் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள வேண்டி, அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

1. 20வது வார்டு அமலி நகர் தெருக்களுக்கு புதியதாக பேவர் பிளாக் சாலை அமைத்துத் தரக் கேட்டல்.
2. கடற்கறை பகுதியில் 2 உயர் மின் கோபுர மின் விளக்குகள் அமைத்துத் தரக் கேட்டல்.
3. அமலிநகர் பகுதிக்கு பிரதான சாலை அமைத்துத் தரக் கேட்டல்.
4. பியோக காலனிக்கு புதியதாக தெரு மின் விளக்கு அமைத்துத் தரக் கேட்டல்.
5. அமலிநகர் பகுதியில் 300 வீடுகள் சொத்து வரி ரசீது இல்லாமல் உள்ளதை, புதியதாக சொத்து வரி நிர்ணயம் செய்து ரசீது வழங்க கேட்டல்.

தீர்மாணம் எண். 29:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண். 30

திருச்செந்தூர் நகராட்சி 25வது வார்டு ஆலந்தலை வடக்குத் தெருவில் சி.எஸ்.ஆர் திட்டத்தின் கீழ் கல்யாண மண்டபம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து நகர் ஊரமைப்புத் துறை அனுமதி பெறாமல் நிலுவையாக உள்ள பணியினை விரைந்து முடிக்கவும், ஆலந்தலை பகுதியில் உள்ள சாலைகளை புதிய சாலைகளாக அமைத்துத் தரவும், திருச்செந்தூரிலிருந்து ஆலந்தலை வரை குரங்கனி தனிக் குடிநீர் திட்ட மெயின் குழாயினை புதியதாக அமைத்து ஆற்று தண்ணீர் பொது மக்களுக்கு வழங்கவும், ஆலந்தலையில் கட்டிட அனுமதி வழங்காமல் உள்ள கட்டிடங்களுக்கு கட்டிட அனுமதி வழங்க வேண்டியுள்ள ஆலந்தலை கிராம நல கமிட்டி அவர்களின் விண்ணப்பம் மன்றுத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

தீர்மானம் எண். 30:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண். 31

திருச்செந்தூர் நகராட்சி 26 வது வார்டு சூசைநகர் முதல் வரிசை தொகுப்பு வீடுகள் அமைந்துள்ள பகுதியில் புதியதாக தெரு மின் விளக்கு மற்றும் பொது குடிநீர் குழாய் அமைத்துத் தர கேட்டுள்ள ரொசாரி காலனி பொதுமக்களின் விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

தீர்மானம் எண். 31:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண்: 32

திருச்செந்தூர் நகராட்சி பகுதிகளில் கட்டிட வரைபடம் வரைய வரைவாளராக பதிவு செய்ய கேட்டு கீழ்கண்டவாறு விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

வ.எண்	பெயர்	முகவரி
1	பா. வில்சன்	260/1, ராஜிவ் நகர், திசையன்விளை.
2	வி. ஆல்பன் பிரபாகரன்	260/1, ராஜிவ் நகர், திசையன்விளை.
3	மு. மந்திரமூர்த்தி	13–16, முக்காணி ரோடு, ஏரல்.
4	V.N. பாரத் ராஜா	6/85, நடுத்தெரு, பணிக்கநாடார் குடியிருப்பு, நாலுமாவடி ஊராட்சி.
5	முனியசாமி	19, ஸ்ரீ முத்துமாலையம்மன் கட்டிடம் (மாடி), ஏரல்.
6	நா. பாஸ்கர்	20, 3வது தெரு, கிருஷ்ணராஜபுரம், மேலூர், தூத்துக்குடி.

தீர்மானம் எண். 32:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண்: 33

திருச்செந்தூர் நகராட்சி, திருச்செந்தூர் வட்டம், கீழத்திருச்செந்தூர் கிராமம் நத்தம் புல எண். 297/3, மொத்த விஸ்தீரணம் 0.36.0 ஹெக்டேரில் 0.04.0 ஹெக்டேர் (10 சென்ட்) நிலத்தினை கோட்ட அளவிலான நூலகம் அமைத்திட நூலகத்துறைக்கு நிலமாற்றம் செய்வது தொடர்பாக தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித ந.க.டி3/38338/2014, நாள். 17.02.2022 ல் தேதி அன்று வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

அலுவலக குறிப்பு :

திருச்செந்தூர் நகராட்சி, திருச்செந்தூர் வட்டம், கீழத்திருச்செந்தூர் கிராமம் நத்தம் புல எண். 297/3, மொத்த விஸ்தீரணம் 0.36.0 ஹெக்டேரில் 0.04.0 ஹெக்டேர் (10 சென்ட்) நிலத்தினை கோட்ட அளவிலான நூலகம் அமைத்திட நூலகத்துறைக்கு நிலமாற்றம் செய்வது தொடர்பாக தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதத்தில் கோரப்பட்டுள்ள இடத்தில் திருச்செந்தூர் நகராட்சி புதிய அலுவக கட்டிடம், புதிய தினசரி சந்தை கட்டிடம் மற்றும் பூங்கா போன்றவை அமைக்கப்பட உள்ளதால் மேற்படி இடத்தினை நூலக கட்டிடம் கட்ட ஒதுக்கீடு செய்ய இயலாது என்ற விவரம் மன்றத்தின் தகவலுக்கு.

தீர்மானம் எண். 33:– ஆணையாளரின் குறிப்பை ஏற்று பொருள் எண். 33 நிராகரிக்கப்பட்டது

பொருள் எண்: 34

திருச்செந்தூர் நகராட்சி அலுவலகம் எதிர்புறம் உள்ள நூலகத்தினை இடித்து அப்புறப்படுத்தி விட்டு, நமக்கு நாமே திட்டத்தின் கீழ் புதியதாக நூலகம் அமைக்க மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மானம் எண். 34:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண்: 35

திருச்செந்தூர் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட இருசக்கர வாகன பாதுகாப்பகம் பல மாதங்களாக ஏலம் விடப்படாமல் உள்ளது. மேற்படி இடத்தினை பராமரிப்பு பணி செய்து ஏலம் விட மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மானம் எண். 35:– தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண்: 36

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் நகராட்சியில் கட்டிட பணிகள் மற்றும் சாலை பணிகள் மேற்கொள்ள புதிய ஒப்பந்ததாராக பதிவு செய்ய திரு. ஜா. திவாகர் சாம், 17/41, தெற்கு தெரு, கடாட்சபுரம் (அஞ்சல்), முதலூர் என்பவரின் சொத்து மதிப்பு மற்றும் GST சான்றுடன் விண்ணப்பம் செய்துள்ளார். மேற்படி நபரை நகராட்சியில் புதிய ஒப்பந்ததாராக பதிவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மானம் எண். 36:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண்: 37

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் நகராட்சி பகுதியில் உள்ள வணிக கட்டிடங்களில் தூய்மை பணியாளர்கள் மூலம் குப்பைகள் தரம் பிரித்து வாங்கப்பட்டு வருகிறது. மேற்படி கட்டிடங்களுக்கு மாதந்தோறும் கீழ்கண்டவாறு குப்பை வரி வசூல் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

வ.எண்.	கட்டிடத்தின் விவரம்	தொகை (மாதத்திற்கு) ரூ.
1	கல்யாண மண்டபம்	10000
2	1 முதல் 30 அறை கொண்ட லாட்ஜ்களுக்கு	3000
3	31 முதல் 50 அறைக்கு மேல் கொண்ட லாட்ஜ்களுக்கு	6000
4	பெரிய ஹோட்டல்	6000
5	சிறிய ஹோட்டல்	3000
6	மடம்	2000

தீர்மானம் எண். 37:– தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண்: 38

திருச்செந்தூர் நகராட்சி பகுதியில் அனுமதியின்றி விதிகளை மீறி கட்டப்பட்டுள்ள வணிக கட்டிடங்கள், லாட்ஜ்கள் மற்றும் ஹோட்டல்களுக்கு நகராட்சி மூலம் வரிவிதிப்பு செய்யப்படாமல் உள்ளது. இதனால் பல லட்சம் இழப்பீடு ஏற்படுகிறது. இதனை சரி செய்ய அரசு விதிகளின் படி அனைத்து கட்டிடங்களுக்கும், நிபந்தனைகளுக்குட்பட்டு வரி விதிப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மானம் எண். 38 :– நகர் மன்ற உறுப்பினர்களின் கருத்துப்படி பொருள் எண்.38 நிராகரிக்கப்பட்டது

பொருள் எண்: 39

திருச்செந்தூர் நகராட்சியில் உபயோகத்திற்கு பயன்படாத பழைய பொது சுகாதார சில்லறை சாமான்கள், பழைய பழுதடைந்த குடிநீர் பைப் சாமான்கள், பழுதடைந்த மின் உதிரி சாமான்கள், அலுவலக பழைய இரும்பு சாமான்கள், பழைய அடிபம்பு சாமான்கள், பழைய மேஜைகள் மற்றும் பழைய நாற்காலிகள் விலைப்புள்ளி பெற்று ஏலத்திற்கு விட மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மானம் எண். 39:– நகர் மன்ற உறுப்பினர்களின் கருத்துப்படி பொருள் எண்.39

ஒத்திவைக்கப்பட்டது

பொருள் எண்: 40

திருச்செந்தூர் நகராட்சி அலுவலகத்திற்கு பின்புறம் உள்ள காலிஇடத்தில் பொருட்கள் பாதுகாப்பு அறை அமைத்து மின் உதிரி சாமான்கள், குடிநீர் உதிரி சாமான்கள் மற்றும் பொது சுகாதார சாமான்கள் வைத்து பாதுகாக்க மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மானம் எண். 40:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண்: 41

திருச்செந்தூர் நகராட்சிகுட்பட்ட பகுதிகளில் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட கட்டிடங்கள் கீழ்கண்ட பழுதடைந்த நிலையில் உள்ளது. மேற்படி கட்டிடங்களை பொதுப்பணித்துறையிலலிருந்து ஸ்திரத்தன்மை சான்று (Stability Certificate) பெற்று கட்டிடங்களை அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதிக்கு.

1. அலுவலகம் அருகில் உள்ள யாத்ரிகள் தங்கும் விடுதி.
2. தினசரி சந்தையில் அமைந்துள்ள வணிக வளாகம் (மீன் கடை).
3. பேருந்துநிலையம் அருகில் உள்ள வணிக வளாக கட்டிடம்.
4. தினசரி சந்தையில் பழுதாகி உள்ள கழிப்பிடம்.

தீர்மானம் எண். 41:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண்: 42

தூத்துக்குடி மாவட்ட இயக்க மேலாண்மை அலகின் இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண். A3/0417/2021, நாள். 11.12.2021ன் படி கொரோனா தொற்றால் பெற்றோரை இழந்த குடும்பங்களை வறுமைக்கோட்டிற்கு கீழுள்ளோர் பட்டியலில் சேர்த்து அதற்கான எண்ணிக்கை அனுப்பிட கேட்டுக்கோள்ளப்பட்டது. அதனடிப்படையில் திருச்செந்தூர் நகராட்சிக்குட்பட்ட தோப்பூர் பகுதியில் சார்ந்த திரு. ஜோஸித் ரிக்சன், த/பெ. ஜெபர்ஸன் வின்சென்ட், 169, புதுத் தெரு, தோப்பூர், திருச்செந்தூர் என்பவரை வறுமைக்கோட்டிற்கு கீழுள்ளோர் பட்டியலில் இணைத்து வறுமைக்கோட்டு எண். 2622 வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மானம் எண். 42:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண்: 43

திருச்செந்தூர் நகராட்சி குடிநீர் விநியோகம் செய்யும் பிராதான திட்டமான குரங்கனி தனிக்குடிநீர் திட்டத்தில் நீரேற்றும் கிணற்றின் 1 மற்றும் 2வது கிணறு பழுதாகி உள்ளதால் மேற்படி பழுதுகளை சரி செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மானம் எண். 43:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண்: 44

திருச்செந்தூர் நகராட்சிக்குட்பட்ட பேருந்துநிலையம் முகப்பு முதல் மின்சார வாரியம் முதல் உள்ள சாலையினை செப்பனிட மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மானம் எண். 44:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண்: 45

திருச்செந்தூர் நகராட்சி, திருச்செந்தூர் – திருநெல்வேலி சாலை, திருச்செந்தூர் – தூத்துக்குடி சாலை, திருச்செந்தூர் – கன்னியாகுமரி சாலை மற்றும் திருச்செந்தூர் – பரமன்குறிச்சி சாலை எல்கைகளில் பொதுமக்கள் மற்றும் பக்தர்களின் வசதிக்காக நவீன வசதி கொண்ட கழிப்பிடம் அமைக்க மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மானம் எண். 45:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண்: 46

திருச்செந்தூர் நகராட்சிக்கு குடிநீர் விநியோகம் செய்யும் குடிநீர் குழாய் பதிக்கப்பட்டு 30 வருடங்களுக்கு மேலானதால் குடிநீர் குழாய் முற்றிலும் பழுதாகி உள்ளது. தற்போது நெடுஞ்சாலைத்துறை மூலம் திருச்செந்தூர் முதல் கிருஷ்ணநகர் சந்திப்பு வரை புதியதாக குழாய் பதிக்க உள்ளதால், கிருஷ்ணநகர் சந்திப்பு முதல் கானம் குடிநீரேற்றும் நிலையம் வரை புதியதாக குழாய் அமைக்க மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மானம் எண். 46:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண்: 47

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் நகராட்சியில் கட்டிட வரைபட அனுமதி வழங்குதல் மற்றும் திட்ட அனுமதி வழங்குதல் தொடர்பாக தற்போது நடைமுறையிலுள்ள முரண்பாடுகளை சீர் அமைத்திடவும், அரசாணை (நிலை) எண். 18 நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 04.02.2019 இன்படி வெளியிடப்பட்டுள்ள தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019ன் கீழ் ஆணைகள் வெளியிடப்பட்டு தமிழ்நாடு அரசிதழ் எண்.43 பகுதி III பிரிவு 1(a) நாள்.04.02.2019ன்படி பிரசுரிக்கப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டு, புதிய கட்டிட அனுமதி வழங்கும் நடைமுறை, திட்ட அனுமதி வழங்கும் நடைமுறை மற்றும் கட்டணங்களை 01.04.2022 முதல் மாற்றி அமைக்கவும் இது தொடர்பாக பொதுமக்கள் அறியும் வண்ணம் செய்தித்தாள்களில் விளம்பரம் செய்து ஆட்சேபணை கோரிக்கைகள் பெறவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அ) இந்நகராட்சியில் கடந்த காலத்தில் நிறைவேற்றப்பட்ட மன்ற தீர்மானத்தின் அடிப்படையிலும் மாவட்ட அரசிதழ் அறிக்கையின் அடிப்படையிலும் நடைமுறையில் இருந்து வந்த கட்டிட அனுமதி கட்டணங்கள் மற்றும் கட்டிட அனுமதி காலம் ஆகியவற்றை தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 விதி எண்.7(2) மற்றும் விதி எண்.14 இன்படி திருத்தம் செய்து கட்டிட அனுமதி கட்டணங்கள் மற்றும் கட்டிட அனுமதி காலத்தை நிர்ணயம் செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது.

ஆ) புதிய கட்டிட விதிகளின்படி தற்போதுள்ள மூன்றாண்டுகளுக்கு வழங்கப்படும் கட்டிட அனுமதி கட்டணத்தை ஐந்து ஆண்டுகள் வரையிலான கட்டிட அனுமதி வழங்கும் காலத்திற்கு ஏற்ற விகிதாச்சாரத்தின் அடிப்படையில் கணக்கீட்டு ஏற்கனவே

நடைமுறையில் உள்ளவாறு அடுத்த நூறு கணக்கீட்டு பின்வருமாறு நிர்ணயம் செய்திட அனுமதிக்காக.

1. பதிவுக் கட்டணம் – ரூ.500/– ஒரு முறை மட்டும் வசூல் செய்ய வேண்டும்.
2. கூர்ந்தாய்வு கட்டணம் கீழ்க்கண்டவாறு வசூல் செய்ய வேண்டும்.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவுகள்	காரியம் அல்லது தொழிலின் பெயர்	அளவு விபரம் மீட்டரில்	காலம்	கட்டண விகிதம் ரூபாய்
175, 176	ஒரு நிலத்தையோ அதன் பாதத்தையோ மனைப்பிரிவாக பிரித்து அங்கீகாரம் பெற (மேற்பார்வை கட்டணம்)	ஒரு ஏக்கர் அதன் பாதத்திற்கு	ஒரு தடவை மட்டும்	25000
197 (1) & 200	அனுமதிக்கப்பட்ட மனைப்பிரிவில் பொது அல்லது சொந்தத் தெருவை நோக்கி உள்ளதுமான இடத்தில் கட்டிடம் கட்டிக் கொள்வதற்கு மனை அங்கீகாரம் செய்ய			
	அ. குடிசை நீங்கலாக குடியிருப்பு வீடு கட்ட	0 – 100 ச.மீ வரை	5 வருடங்கள்	250.00
		100 – 500 ச.மீ வரை		375.00
		500 ச.மீ மேல்		625.00
	ஆ. குடியிருப்பு அல்லாத கட்டிடம் கட்ட	0 – 100 ச.மீ வரை	5 வருடங்கள்	375.00
		100 – 500 ச.மீ வரை		750.00
		500 ச.மீ		1250.00
197, 201 & 215	குடிசை நீங்கலாக புதுக்கட்டிடம் கட்டவோ புதுப்பித்து கட்டவோ மாறுதல் செய்து கட்டவோ அனுமதி			
	1. குடியிருப்பு கட்டிம்	10 ச.மீ அதன்	5 வருடங்கள்	

	(Residential) ஆர்.சி.சி. அல்லது லாகடக் கட்டிடம் அ) தரைத்தளம் ஆ) முதல் தளம் இ) இரண்டாம் தளம் ஈ) கூடுதல் தளங்களுக்கு	பாகத்திற்கு		 175.00 225.00 275.00 300.00
	2. குடியிருப்பு அல்லாத கட்டிடம் (Non Residential) ஆர்.சி.சி. அல்லது லாகடக் கட்டிடம் அ) தரைத்தளம் ஆ) முதல்தளம் இ) இரண்டாம்தளம் ஈ) கூடுதல் தளங்களுக்கு	10 ச.மீட்டர் அதன் பாகத்திற்கு	5 வருடங்கள்	 320.00 600.00 1500.00 1700.00
	3. அபிவிருத்தி கட்டணம் அ) குடியிருப்பு கட்டிடம் மனைக்கு ஆ) குடியிருப்பு கட்டிடத்தின் பரப்பிற்கு இ) குடியிருப்பு அல்லாத கட்டிடத்தின் மனைக்கு ஈ) குடியிருப்பு அல்லாத கட்டிடத்தின் பரப்பிற்கு	10 ச.மீ அதன் பாகத்திற்கு	5 வருடங்கள்	 40.00 60.00 60.00 120.00
	4. சுற்றுச்சுவர் கட்ட (1.5 மீ உயரம்)	Per Rm	5 வருடத்திற்கு	200.00
	5. மல அறை, குளியல் அறைகள் கட்டுவதற்கு	முக்கிய கட்டிடத்துடன் கூடியது, தனியாக ஒவ்வொன்றுக்கும்	5 வருடங்கள்	900.00
	6. செப்டிக் டங்க் 1க்கு	முக்கிய கட்டிடத்துடன் தனியாக	5 வருடங்கள்	1000.00

	7. மாடிப்படிக்கட்டு 1க்கு	முக்கிய கட்டிடத்துடன் தனியாக	5 வருடங்கள்	500.00
	8. பழைய சுவர்களை கொத்தி பூச அல்லது தளம் போட அல்லது இதுபோன்ற சில்லறை மராமத்து வேலைகளுக்கு	10 ச.மீ அதன் பாகத்திற்கு	1 வருடம்	675.00
	9. அனுமதியற்ற கட்டுமான அறிவிப்பு வழங்கப்பட்டிருந்தால்	மொத்த தொகையில் 50% கூடுதலாக செலுத்தப்பட வேண்டும்		
207	குழாய் கிணறு, குழிக்கிணறு போன்ற எவ்வகை கிணறு அமைக்க	ஒவ்வொன்றுக்கும்	1 வருடம்	1000.00
208	குடிசைகள் கட்ட, புதுப்பிக்க 20 ச.மீ பாகத்திற்கும் குறைவாக	ஒவ்வொரு 10 ச.மீ அதன் பாகத்திற்கும்	1 வருடம்	750.00
217(2)	அ) தற்காலிக குடிசை அல்லது கொட்டகை அல்லது செட்டு போட	10 ச.மீட்டர் அதன் பாகத்திற்கும்	மூன்று தினங்கள்	1000.00
	ஆ) அனுமதி வழங்கப்பட்ட கட்டிட வரைபடங்களுக்கு உண்மை நகல்கள் வழங்க	நகல் 1க்கு		500.00
197, 201 & 215	1) நிரந்தர திரையரங்கு கட்டிகொள்ள தடையில்லா சான்று வழங்குவதற்கு	இனம் 1க்கு	ஒரே தடவை	25,000
	2) தற்காலிக திரையரங்கு கட்டிக்கொள்ள தடையில்லா கான்று வழங்குவதற்கு	இனம் 1க்கு	ஒரே தடவை	7,500
	3) சர்க்கஸ் கொட்டகை அமைத்து கொள்ள	இனம் 1க்கு	மாதம் 1க்கு	3500.00
	4) நகரமைப்பு பாதிப்பு இல்லையெனச் சான்று வாழங்க	இனம் 1க்கு	1 தடவை மட்டும்	1000.00
	5) கட்டிட் முடிவுச் சான்றிதழ் வழங்க	இனம் 1க்கு	1 தடவை மட்டும்	1500.00
	6) மனைப்பிரிவு வரைபட	இனம் 1க்கு	1 தடவை	750.00

	நகல் வழங்க		மட்டும்	
	7) கட்டிட பட வரைவாளர் உரிமம் பதிவு செய்தல்		5 ஆண்டுகள்	5000.00
	8) கட்டிட படி வரைவாளர் உரிமம் பதிவு செய்தல்		உரிமம் அனுமதி காலம் 5 ஆண்டுகள்	5000.00
	9) அத்துமால் அளந்து காட்ட	1 சர்வே எண்ணுக்கு	1 தடவை	1500.00
	10) நகரளவு வரைபடம் சிட்டா அடங்கல் வழங்க	1 சர்வே எண்ணுக்கு	1 தடவை	750.00
	11) நகரமைப்பு திட்ட வரைபடம் 1க்கு	ஒரு பிரதி		1500.00
	12) கட்டிட இடிபாடுகள் மற்றும் கட்டிட சாமான்கள் தெருவின் ஓரம் குவித்து வைக்க		1 தடவை மட்டும்	கட்டிட உரிமையைக் கட்டணத்தில் 75%
183 (1)	அ) வீட்டு விழக்களிலும் வியாபார நோக்கு இல்லாத இதர விழக்களிலும் பந்தல் போடுவதற்கு	10 ச.மீ அதன் பாகத்திற்கு	நாள் 1 க்கு	300.00
	ஆ) வியாபார நோக்குடன் உள்ள காரியங்களுக்கு பந்தல் போடுவதற்கு	10 ச.மீ அதன் பாகத்திற்கு	நாள் 1 க்கு	1000.00
183 (1) இ	அ) நகராட்சிக்குச் சொந்தமான இடங்களில் விளம்பரப் பலகை அமைத்து விளம்பரம் செய்ய வர்ணம் பூசி விளம்பரம் செய்ய	10 ச.மீ அதன் பாகத்திற்கு	நிதி ஆண்டு 1க்கு	1750.00
	ஆ) பஸ் நிலையத்தில் விளம்பரம் செய்ய	10 ச.மீ அதன் பாகத்திற்கு	நிதி ஆண்டு 1க்கு	3500.00
197(1) பி	அ) கூரையை மாற்றி அமைக்கவோ இடித்து கட்டும் கட்டுமானங்களுக்கு	10 ச.மீ அதன் பாகத்திற்கு	5 வருடத்திற்கு	500.00
217 (1)	1) மேல்நிலைத் தொட்டி அமைக்க	ஒவ்வொன்றுக்கும்	5 வருடத்திற்கு	1500.00

175, 176 மற்றும் 177	1) அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் ஒரு மனையை பிரிக்க	ஒவ்வொரு மனைக்கும்	ஒரு முறை	**750**
	2) அங்கீகரிக்க மனைப்பிரிவில் மனைகளை ஒருங்கிணைக்க			**1500**
	3) கட்டிட மேல்முறையீட்டு விண்ணப்பத்திற்கு	ஒவ்வொன்றுக்கும்		**1250**
	மழைநீர் சேகரிப்பு	0–500 சதுர அடிக்கு		**5000.00**
		500 – 1200 சதுர அடிக்கு		**8000.00**
		1200 – 2400 சதுர அடிக்கு		**1000.00**
		2400 சதுர அடிக்கு மேல்		**15000.00**

தீர்மாணம் எண். 47:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண். 48

திருச்செந்தூர் பேரூராட்சி அரசாணை எண். 116 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 07.12.2021–ல் நகராட்சியாக அமைத்து உருவாக்கப்பட்டு, தற்போது உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்பட்டு தலைவர் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். மேற்படி நகராட்சியில் தலைவருக்கென தனியாக வாகனம் இல்லாததால் பொதுமக்களின் புகார்களை நேரில் சென்று கேட்டறியவும், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் 45 கி.மீ தொலைவில் உள்ளதால், அங்கு நடைபெறும் கூட்டங்களில் வாகனம் இல்லாமல் சிரமமாக உள்ளது. நடைபெறும் கூட்டங்களில் கலந்துக் கொள்ள இயலாத நிலையில்

மேலும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் சுமார் 20.00 கி.மீ தொலைவில் உள்ள பொன்னன்குறிச்சியிலிருந்து குடிநீரானது பம்பிங் செய்யப்படுகிறது மற்றும் நகராட்சிக்கு சுமார் 38.00 கி.மீ தொலைவில் உள்ள குரங்கனியிலிருந்து குடிநீரானது பம்பிங் செய்யப்பட்டு நகராட்சி பகுதிகளுக்கு குடிநீர் வழங்கப்படுகிறது . இந்நிலையில் இந்த நீரேற்றும் நிலையத்தினை அடிக்கடி கண்காணிக்க வேண்டியதும் அவசியமாக உள்ளது. எனவே அனைத்திடங்களுக்கும் சென்று வர ஏதுவாக ரூ. 8,00,000/– உத்தேச மதிப்பிட்டில் புதியதாக ஒரு ஈப்பு வாகனம் (Bolera) நகராட்சி பொதுநிதியில் இருந்து வாங்க மன்றம் அனுமதிக்கு.

தீர்மாணம் எண். 48:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண். 49

திருச்செந்தூர் நகராட்சி அனைத்து வார்டுகள் உள்ள அனைத்து வீடுகள் மற்றும் வணிக நிர்வனங்களின் முகப்பு சொத்துவரி எண்., கதவு எண்., குடிநீர் எண். மற்றும் பாதாள சாக்கடை இணைப்பு எண். தெரியும் வண்ணம் பெயர் பலகை அமைக்க மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மாணம் எண். 49:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண். 50

திருச்செந்தூர் நகராட்சி பகுதியில் உள்ள குடிநீர் மெயின் குழாய் இணைப்பு எடுக்கப்பட்டுள்ள அனைத்து குடிநீர் இணைப்புகளும் துண்டிப்பு செய்து அரசு விதிகளின் நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மாணம் எண். 50:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண். 51

திருச்செந்தூர் நகராட்சி சன்னதி தெருவில் குடிநீர் மெயின் குழாயில் வீட்டு இணைப்பு மற்றும் வணிக நிர்வனங்களில் குடிநீர் இணைப்பு மெயின் குழாய் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி இணைப்புகளை அனைத்தும் குடிநீர் விநியோக குழாயில் மாற்றி அமைக்க மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மாணம் எண். 51:– தீர்மானிக்கப்பட்டது.

(ஓம்) திருமதி. ர.சிவஆனந்தி,
தலைவர்
திருச்செந்தூர் நகர் மன்றம்

/உண்மை நகல்/

ஆணையாளர்
திருச்செந்தூர் நகராட்சி